# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்</u>

அ.வ.எண்.99/2015

பெயர் – சுப்பிரமணியன் (DW1)

நாள் – 17.11.2025

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை.</u>

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.Sc., B.Com படித்து இடைநிறுத்தம் செய்துள்ளேன். வாதி சுப்புராஜ் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பது குறித்து எனது வழக்கறிஞரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டு தான் நான் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். சாத்தூர் நீதிமன்றத்திற்கு இந்த வழக்கினை தவிர வேறு சில வழக்குகளுக்காக நீதிமன்றத்திற்கு நான் அடிக்கடி வந்து செல்வேன் என்றால் சரிதான் . நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் பி.வா.சா.ஆ.1 மற்றும் 4 ஆகிய ஆவணங்கள் இரண்டும் ஒன்றுதான் என்றால் சரிதான்.

2) மேற்படி ஆவணத்தில் செல்லச்சாமி, புளூஸ்டார் பயர் ஒர்க்ஸ் மற்றும் நானும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான், வக்காலத்தில் கையொப்பம் செய்துள்ளோம். நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ.3 ஆவணமான புகார் மனு இரசீது யார் கொடுத்துள்ளார்கள் என்றால் செல்லச்சாமியின் புகார் மனு ஆகும். செல்லச்சாமி கொடுத்த புகார் மனுவினை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ல் எனது கையொப்பம் இடம்பெற்றுள்ளதென்றால் சரிதான். மேற்படி ஆவணமானது உண்மைத்தன்மை இல்லை என்பதால் தான் அதில் செல்லச்சாமி கையொப்பம் செய்யாமல் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

3) காவல் துறையில் எனக்கு இருக்கும் ஆள் பலத்தையும், பண பலத்தையும் பயன்படுத்தி மேற்படி ஆவணத்தை மோசடியாக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, சரியான விசாரணைக்கு பின்பே பி.வா.சா.ஆ.3 ஆனது உற்பத்தி செய்யப்பட்டது. காவல் துறையில் தென்மண்டல DIG ஆக எனது உறவினர் பணியாற்றி வந்தார் என்றால் சரியல்ல. லட்சுமியாபுரம், புதூர் ஆகிய இரண்டு பெயர்களுமே ஒரே கிராமத்தினைத்தான் குறிக்கிறது என்றால் சரிதான். எனது ஊருக்கு வடக்கே புளூஸ்டார் பயர்ஒர்க்ஸ் இடம் பெற்றுள்ளதென்றால் சரிதான். அதற்கு வடக்கே மேற்படி கிராமம் இடம்பெற்றுள்ளதென்றால் சரிதான்.

4) ஏழாயிரம்பண்ணை முதல் சாத்தூர் செல்லும் ரோட்டில் அய்யாச்சாமியின் தோட்டத்திற்கு கிழக்கேயும், சுந்தரம்பிள்ளை தீப்பட்டி ஆபீஸ்க்கு மேற்கேயும் உள்ள பாதையில் புளூஸ்டார் பயர்ஒர்க்ஸ் உரிமையாளர்கள் சென்று வருகிறார்கள் என்றால் சரியல்ல, அது வண்டிப்பாதையல்ல, நீரோடை ஆகும். சாத்தூர் ஏழாயிரம்பண்ணை ரோட்டில் இருந்து அய்யாசாமியின் தோட்டத்திற்கு கிழக்கேயும், சுந்தரம்பிள்ளை தீப்பட்டி ஆபீஸ்க்கு மேற்கேயும் உள்ள பாதை சுமார் 7 கிலோமீட்டர் இருக்குமா என்றால், சரியல்ல அது நீரோடை சுமார் 1 கிலோமீட்டர், பாதை 2 கி.மீ இருக்கும்.

5) நான் சொல்வது போல் அது நீரோடையல்ல என்றும் அது வண்டிப்பாதை வழியாகத்தான் புளூஸ்டார் பயர்ஒர்க்ஸ் உரிமையாளர்கள் பயன்படுத்தி வருகின்றனர் என்றால் சரியல்ல, அது நீரோடை, வேறு வழி இல்லாமல் அந்த பாதையை பயன்படுத்தி வருகிறார்கள். மேற்படி அந்த பாதையானது நீரோடை என்பதற்கான ஆவணத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வண்டிப்பாதைக்கு மேற்கே சுப்புராஜ்க்கு பாத்தியப்பட்ட இடமுள்ளதென்றால் சரிதான். அய்யாச்சாமி தோட்டத்திற்கு கிழக்கே செல்லும் பாதையில் இருந்து வாதி சுப்புராஜின் இடத்திற்கும் இடையே 25 அடி தூரம் இருக்குமா என்றால் சரியல்ல, 200 அடி இருக்கும்.

6) சர்வே எண்.48/2B, 52/1 ஆகிய சொத்துக்கள் சுப்புராஜ்க்கு பாத்தியப்பட்டவை என்றால் சரியல்ல. சர்வே எண்.48/2B, 52/1 ஆகிய சொத்துக்கள் சுப்புராஜ்க்கு பாத்தியப்பட்டவையல்ல என்று எனது எதிர்வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் நான் கூறியுள்ளேனா என்றால் எனக்கு அது குறித்து நினைவில்லை. (எதிர்வழக்குரையும், நிரூபண வாக்குமூலமும் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது. சாட்சி படித்தபின்னர் மேற்படி சர்வே எண்.48/2B, 52/1 ஆகிய சொத்துக்கள் சுப்புராஜ்க்கு பாத்தியப்பட்டவையல்ல என்று எனது எதிர்வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் நான் கூறியுள்ளேனா என்றால் இல்லை என்று கூறியுள்ளார். )

7) சர்வே எண்.48/2B, 52/1 ஆகிய இரண்டு சொத்துக்களுக்கும் பட்டா உள்ளதா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அந்த சொத்துக்களில் சுப்புராஜ் மக்காச்சோளம் 10 ஆண்டுகளாக விளைச்சல் செய்து வருகிறார் என்றால் சரிதான். வண்டிப்பாதைக்கு வடக்கே கெக்காலி, நாகராஜன், செல்லச்சாமி, கோவிந்தராஜன்

ஆகியோருக்கு பாத்தியப்பட்ட நிலமுள்ளதென்றால் சரிதான். அய்யச்சாமி மற்றும் சுந்தரம்பிள்ளை தீப்பட்டி ஆபீசிற்கு செல்லும் பாதை நீண்டு கிழக்காக திரும்பும் இடத்தில் எனது நிலம் உள்ளதென்றால் சரிதான். அதன் அருகில் வேறு நிலமும் எனக்கு பாத்தியப்பட்டதென்றால் சரிதான்.

8) அய்யச்சாமி மற்றும் சுந்தரம்பிள்ளை தீப்பட்டி ஆபீசிற்கு இடையே செல்லும் பாதையின் வழியாகத்தான் நானும் எனது நிலத்திற்கு சென்றுவருகிறேன்எ ன்றால் எதிர் கட்சியினர் பிரச்சனை செய்து வந்ததால் வேறு வழியாமல் அந்த பாதையை பயன்படுத்தி வருகிறேன். எதிர் கட்சியினர் பிரச்சனை செய்து வந்ததற்கு காவல் நிலையத்தில் ஒரு புகார் அளித்ததாக சொல்லியுள்ள நிலையில் அந்த புகார் மனுவினை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சுப்புராஜ் குடும்பத்தார் ஒரு போதும் என்னிடம் பிரச்சனை செய்யவில்லை எனவே தான் புகார் மனுவினை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.48/2B, 52/1 வண்டிப்பாதை உள்ளதா என்பது குறித்து புதூர் கிராம மக்களிடம் விசாரித்தால் தெரியவரும் என்றால் அந்த கிராமத்தில் உள்ள மூத்த குடிமக்களிடம் விசாரித்தால் தெரியும். (வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).